1971 டிசம்பர் 9]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, 374 ஒன்றியங்கள் இருக்கின்ற தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை பிளாக்குகளுக்கு இந்தப் பிரதம சுகாதார நிலையம் இல்லாமல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பிரதம சுகாதார நிலையம் என்பது இப்போது எல்லா ஒன்றியங்களிலும் ஏற்பட்டுவிட்டது. இரண்டு ஒன்றியங்களில் மட்டும் எந்த இடத்தில் வைப்பது என்பதிலே தகராறு இருந்தது. அதிலே ஒன்றில் தகராறு தீர்ந்து இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. அது சேலம் மாவட்டத்தில் உள்ள ஒன்றியம். மற்றொரு ஒன்றியத்தில் வழக்குக்குப் போயிருக்கிற காரணத்தால் திறக்கப்படவில்லை.

THIRU M. A. LATHEEF : Sir, the Hon. Minister has stated that there should be only one health centre for a Union. At least in areas where there are forests and intractable roads and inaccessable areas but with sufficient human habitation with the Government consider the necessity of having more than one health centre or sub-centre there ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Primary Health Centres are formed with a view to serve the whole Union through a particular type of dispensary and it is not always an ordinary dispensary. Wherever there is necessity the Union also may decide to have some dispensary and the Government will come forward with some help of grant.

பீடித்தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் விடுமுறை

*196 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித்தொழிலாளர்களுக்குப் பண்டிகை நாட்களில் கூலியுடன் விடுமுறை அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) தேசிய விடுமுறை நாட்களுக்கும் கூலியுடன் விடுமுறை அளிக்க உத்திரவு இடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) 19—12—70-ம் தேதியிட்ட அரசு நிலை ஆணை எண் 1833 மூலம் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள், அறிவிப்பு வெளியிட்ட நாளான 27—1—1971 அன்று பீடி அல்லது சுருட்டு அல்லது இரண்டுமே தயாரிப்பது சம்பந்தமான வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்கள், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய திருவிழா விடுமுறை நாட்கள்) சட்டத்தின் வரம்புகளுக்குட்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 27—1—1971 முதலே நமது பீடித் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஊதியத்தோடு கொடுக்கப்படும் என்ற உத்தரவு போட்ட பிறகும் இன்னும் பல பீடி முதலாளிகள் இதை அமல் நடத்தாமல் இருக்கிறார்கள். அதை அமல் நடத்த அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சில முதலாளிகள் இந்த உத்தரவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களை அதை நடைமுறைக்குக் கொண்டுவரும்படி அரசு ஆணையிட்டிருக்கிறது. குறிப்பாக எந்தெந்த இடங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்று கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்த விடுமுறை நாட்கள் வழங்கலாம் என்று உத்தரவிட்ட பின்னாலும் எந்தெந்த அமைப்புகள் இந்த உத்தரவை அமல் நடத்தவில்லையோ அந்த அமைப்புகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைத்தான் இதற்கு முன்னால் கேட்ட துணைக் கேள்விக்குப் பதில் கூறும்போது கூறினேன். எந்தெந்த கம்பெனிகளில் அந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லையோ அதைக் குறிப்பிட்டுத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கழிந்த பொதுத் தேர்தல் நடந்தபோது தேர்தல் நடந்த அன்றைக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறையை சில நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. அப்படித் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? பொதுத் தேர்தல் நடக்கும்போது அந்தத் தினத்திற்கு ஊதியத்தோடு விடுமுறை விடுவது பற்றி அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தக்க விவரம் தந்தால் அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அரசினுடைய ஆணையை நிறைவேற்றாத நிறுவனங்களின் லைசென்சை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எந்தெந்த நிறுவனங்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தால் அதற்கு ஆவன செய்ய அரசு முன்வரும்.

திரு. சு. துரைசாமி : பண்டிகை நாட்களுக்கு, விடுமுறை நாட்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளம், ஞாயிற்றுக் கிழமை விடுமுறைக்குக் குறைந்த பட்ச கூலி கொண்டு வருகிற இடங்களில் அரசாங்க அதிகாரிகளே அந்தச் சம்பளத்தை முன்நின்று கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கெனவே அப்பேர்ப்பட்ட ஆணை இடப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு உத்தரவிட்டிருக்கிறது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1971 டிசம்பர் 9]

திரு. நா. வீராசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக் கூடிய பீடித் தொழில் முதலாளிகள் ஆங்காங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பெய்டு ஹாலிடேஸ் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டும் கூட இப்போது அதைக் கொடுக்கத் தகராறு செய்து கொண்டு பக்கத்திலுள்ள சித்தூர் தாலுகாவில் இருக்கக்கூடியவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். இதனால் அந்தத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இதை அரசாங்கம் கருத்தில் கொண்டு வேண்டிய நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபோன்று செய்யும் முதலாளிகளை அரசு அழைத்து தக்க அறிவுரை கூறியிருக்கிறது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி அரசு பரிசிலித்து வருகிறது.

வட ஆர்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள்

*197 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினைக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் அண்மையில் பீடித் தொழிலாளர்களுக்கும், பீடி முதலாளிகளுக்கும் இடையே தொழில் உறவு பற்றிய ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அது அமல் நடத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) தொழில் தகராறு கள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், வட ஆர்க்காடு மாட்டத்தில் பீடி வணிகக்குறி உரிமையாளர்களுக்கும் பீடி சுற்றுபவர்களுக்கும் இடையே, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் **7—7—1970** அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன் படிக்கையைத் தவிர வேறு எந்த உடன்படிக்கையும் அண்மையில் ஏற்படவில்லை.

(இ) ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : அந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் என்ன ? இன்று நாட்டில் உள்ள பல லட்சக் கணக்கான பீடித் தொழிலாளர்கள் மற்றத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க கூடிய எந்த விதமான வசதிகளையும் பெறுமல் அல்லலுற்றுக் கொண்டிருப்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். மற்றத் தொழி லாளர்கள் பெறுகிற சுகாதார வசதி, மற்றும் எல்லா வசதிகளும் இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே அந்த உடன் பாட்டில் சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதைச் சில முதலாளிகள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.